

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் “ஓகி” புயல் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்வதற்காக இன்று (19.12.2017) கன்னியாகுமரிக்கு வருகை தந்த போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் வரவேற்றார்கள். இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோஹித் அவர்கள் உடனிருந்தார்.



மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களை இன்று (19.12.2017) கன்னியாகுமரி அரசு விருந்தினர் மாளிகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் சந்தித்து, “ஒகி” புயல் மற்றும் கனமழை காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து விளக்கி, நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள மத்திய அரசின் நிதியுதவி கோரி கோரிக்கை மனுவினை அளித்தார்கள். இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோஹித், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர் டாக்டர் மு. தம்பிதுரை, மாண்புமிகு மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் நிதித் துறை இணை அமைச்சர் திரு பொன். ராதாகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.